
# அரண்

ARAN International e-Journal of Tamil Research

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பாடாண் திணை கூறும் மறத்தில் அறம்

*Virtue within Valour, as Expounded by the Paadaan Thinai*


முனைவர் சி. அழகர்

*Dr. S. Alagar*

நெறியாளர்,

*Guide*

துறைத்தலைவர்

*Head of Department*

தமிழாய்வுத்துறை

*Department of Tamil Studies*

கொங்கு கலை அறிவியல் கல்லூரி

*Kongu College of Arts and Science*

கரூர் — 639 006.

*Karur — 639 006.*

R. உமா

*R. Uma*

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

*Doctoral Research Scholar (Part Time)*

தமிழாய்வுத்துறை

*Department of Tamil Studies*

கொங்கு கலை அறிவியல் கல்லூரி

*kongu College of Arts and Science*

கரூர் — 639 006.

*Karur — 639 006.*

**(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)**



**ஆய்வுச் சுருக்கம் :**

புறநானூற்றில் பாடாண் திணைப் பாடல்களை முதன்மை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதில் மறத்தில் அறம் என்னும் பொருளில் இக்கட்டுரை அமைகிறது. இவ்வாய்விற்கு சமூகவியல், மார்க்சிய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. பண்டையத் தமிழ் சமூகம் வீரயுக காலமாக இருந்துள்ளது. சமூகத்தில் போர் பிரதான தொழிலாக இருந்துள்ளது. நாட்டின் எல்லையை விரிவுபடுத்த படை எடுப்புகள் தொடர்ந்து நடந்துள்ளது. அப்படையெடுப்புகள் அறத்தோடு நடந்ததையும், அறம் நாடாமல் மறம் நாடும்

அரசர்களுக்கு புலவர்கள் அறநெறி போதித்து வழி நடத்தியுள்ளதையும், ஆராய முற்படுகிறது. தமிழ் சமூகம் அக வாழ்வில் மட்டுமல்ல புறவாழ்விலும் மன்னர், வீரர், மக்கள் புலவர்கள் மறத்தோடும், அறத்தோடும், வாழ்ந்ததை ஆராய்ந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** பாடாண் திணை, வீரத்தில் அமைந்த அறம், பண்டைய தமிழ்ச் சமூகம், தொகைநூல்

*Abstract:*

*This study primarily draws upon the *Paadaan Thinai* poems found in the *Purananuru* anthology as its primary source material. Specifically, this article focuses on the theme of "Virtue within Valour" (*Marathil Aram*). Sociological and Marxist approaches have been employed as the methodological frameworks for this research. Ancient Tamil society was characterised by a "Heroic Age," in which warfare was the predominant occupation. Military expeditions were frequently undertaken to expand national boundaries. This study seeks to examine how these invasions were conducted in accordance with ethical principles, and how poets guided and counselled kings—who were often inclined solely toward valour—by imparting moral wisdom. Furthermore, the research explores how the various constituents of Tamil society—including kings, warriors, common people, and poets—lived their lives with a harmonious blend of both valour and virtue, not only in their private domestic spheres but also in their public social realms.*

*Key words: Paadaan Thinai, Virtue within Valour, Ancient Tamil Society, Anthology*

<u>**முன்னுரை :**</u>

சங்க காலத் தமிழர்கள் வாழ்வை அகம் புறம் எனப் பிரிப்பர். அக இலக்கியங்கள் தமிழரின் அக வாழ்வையும், புற இலக்கியங்கள் தமிழரின் புறவாழ்வை வாழ்ந்தாலும் புற வாழ்க்கையிலும் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை பாடாண் திணைப் பாடல்களில் பதிவாகியுள்ள மறச் செயல்களிலும் தமிழர்கள் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர். அச்செய்திகள் பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**படையின் வெற்றி அறத்தாலும் முடியும்**

பண்டையத் தமிழ் சமூகத்தில் அரசர்கள் ஒருவருக்கொருவர் வலிமையைக் காட்ட படைகளைப் பெருக்கிக்கொண்டு எதிரிகளை வீழ்த்தி வெற்றி கொண்டு பெருமிதம் கொண்டனர். அதனால் உயிர் சேதம் ஏற்பட்டதை கண்டு புலவர் பெருமக்களும் சான்றோர்களும் சிந்தித்து அரசர்களுக்கு ஆற்றுப்படுத்தியதை புற இலக்கியங்கள் நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்

பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை

ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே ! 1 புறம் (35:24-26)

"நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது

பகடுபுறம் தருநர் பாரம் ஓம்பிக

குடிபறும் தருகுவை யாயினின்

அடிபுறம் தருகுவர் அடங்கா தோரு" 2 புறம் (35:31-34)

யானைப்படையின் மூலமும், படை வீரர் மூலமும் எதிரிகளை வீழ்த்தி வென்று உனக்கு வெற்றியைத் தேடித் தந்ததைக் காட்டிலும், உனக்கு உண்மையான வெற்றியைத் தேடித்தந்தது உன் நாட்டில் உள்ள வேளாண் குடிமக்களே அவர்களை நீ பாதுகாத்து வளத்துடன் வாழ வைத்ததுடன் எனது குடியினரையும் காப்பாயானால் உன் ஆணைக்கு அடங்காதவர் கூட உன் அடியிணையே போற்றுவர் என்று புலவர்கள் அரசனை பார்த்து கூறுவது போல் அமைந்துள்ளது. நாட்டின் எல்லையை விரிவுபடுத்த படைகள் மட்டும் போதாது அத்துடன் உன் அன்பையும் மக்கள் மீது செலுத்து உன்னடிமையாவார்கள் என்ற அற வாழ்வை போதித்த நிகழ்வைக் காணமுடிகிறது.

**ஒத்த வீரருடன் போரிடுதல் :**

சங்க காலம் வீரயுகத்தின் கடைநிலையில் நின்ற காலம் இக்காலச் சூழலில் வீரம் செரிந்த மன்னர்கள் தங்களின் எல்லையை விரிப்பதையே எண்ணமாகக்கொண்டு செயல்பட்டு வந்துள்ளதை அறிய முடியும். அச்சூழலில் போர் களத்திலும், படைபலம் கொண்ட எதிரியும் ஒத்த வலிமை கொண்டவராக இருந்தால் போரிடுவேன் என்று கூறும் மன்னர்களும் இருந்துள்ளனர்.

"கடாஅ யானைக் கழற்கால் பேகன்

கொடை மடம் படுதல் அல்லது

படை மடம் படான்பிறர் படைமயக்குறினே" 3 புறம் (142:4-6)

இரவலர் கேட்டால் வரையாது கொடுக்கும் இயல்பினன் பேகன். கொல்யானையும் வீரக்கழலும் உடைய அவன் கொடையில் மடமையுடையவன். ஆனால் போரில் தன்னை ஒத்த வீரருடன் பொருந்தி மோதுவானே அன்றி தகுதியற்றவருடன் போரிடும் மடமையன் அல்ல என்று பேகனைப் பரணர் பாடியுள்ளார். "வீரம் மையப்படுத்தப்பட்ட சூழலில் சிறியவனாகிய மகன் உட்படக் குடும்பத்தினர் அனைவரும் போருக்கு அனுப்பிய மூதின் மகளின் இறப்பும்" 4 காண முடிகிறது.

"மறக்குடி மாண்புகள் போற்றப்பட்டன. வீரம் சார்ந்த போர்க்கல்வி முதன்மைப்பட்ட நிலையில் சான்றோர் என்றும் சொல் அறிவு சார்ந்தவரை மட்டுமல்லாது (புறம் 191, 218) வீரம் செரிந்த மறவர்களையும் குறிப்பிடப்பட்டுள்ளது." 5 உடைமைச் சமூகத்தில் முற்றிலும் மாறுபட்டு நடுகல் வழிபாட்டை மட்டுமே நம்பியிருந்தனர். அந்த சமூகச் சூழலில் தனக்கு ஒத்த வீரம் கொண்டவருடன் போரிடுவேன் என்று சபதம் எடுத்த அரசனை புறப்பாடல் வழியும் அறியப்படுகிறது.

**அறம் பேன அறிவுறுத்தல் :**

பண்டைத் தமிழ்ச் சமூகம் அறத்தின ;வழியே நடைபெற்றுள்ளது. அதனை நெறிபடுத்த சான்றோர் பெருமக்கள் இருந்துள்ளனர். சமூகத்தில் அறம் போன அரசனே முன்னோடியாக இருக்க வேண்டும் என்பதை அரசனுக்கு வலியுறுத்தியுள்ளனர்.

"முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே

இறைஞ்சுக பெருமநின் சென்றி திறந்த

நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே

வாடுக இறைவனின் கண்ணகி ஞன்னார்

நாடுசுடு கமழ்புகை எறிந்த லானே" 6 புறம் (6:18-22)

சான்றோர்களும், புலவர் பெருமக்களும், ஆட்சியாளர்களுக்கு உன்குடை தாழ்வது இறைவன் ஒருவருக்கே தலை தாழ்வது சான்றோர்க்கே, சினம் தாழ்வது வாழ்க்கை துணைவியின் முன்னரே

என்று அறநெறியை போதித்து புகழ்ந்து கூறியுள்ளார் காரிகிழார். மன்னன் எவ்வழி அவ்வழியே மக்கள் என்பதால் மன்னனுக்கு அறம் சார்ந்த வாழ்வை போதித்துள்ளனர்.

**<u>பிறநாட்டவர்க்கு உணவளித்து காத்தல் :</u>**

தன்நாடு தன் மக்கள் என்று மன்னர்கள் எல்லைக்குள் சுருங்கி விடாமல் மக்களைக் காப்பது அரசனின் கடமை என்பதை புலவர்கள் அரசனுக்கு உணர்த்தியுள்ளனர். எதிர் நாட்டினரை எதிரியாக பார்க்காமல் மனித நேயத்தோடு உணவளிக்க ஆற்றுப் படுத்தியுள்ளனர்.

“அலங்குளைப் புரவி ஐவரொடு சினைகி

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

ஈரைம் பதினமரும் பொருகளத்து ஒழியப்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்” 7 (புறம் 2:13-16)

“மறைநெறி திரிவுற்றுப் பிறழ்ந்தாலும் கடமை நெறியினின்றும் சற்றும் பிறழாதவர் வட பல அரசர்கள் மாறுபட்டுப் பொருதலும் இவன் சோறளித்து உதவினானென்பது இவது சிறப்பு என்று புலவர் பாடியுள்ளார்.” “தன் நாட்டு மக்களைக் காப்பதோடு அமையாமல் பிற நாட்டு மக்களையும் காத்து நின்ற மன்னனின் மனித நேயத்தை எவ்வாறு பாராட்டினாலும் தகும் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்றும் சேரமன்னன், பாண்டவர்களுக்கும் துரியோதனன் தலைமையிலான கௌரவர்களுக்கும் பெரும் போர் நடைபெற்றபோது போர் முடியும் வரை போர் வீரர்களுக்கும் பெருஞ்சோறளித்துக் காத்தான்” 8 மன்னன் தன் ஆட்சி முறையில் பெரும் பொருள் செலவானாலும் பிறர் காட்டுப் படைவீரர்களுக்கும் சோறளித்தலைத் தன் ஆட்சியில் கோட்பாடாகக்கொண்டிருந்தான் என்பதை அறிய முடிகிறது.

**<u>போரில் அறம் பின்பற்றல் :</u>**

தமிழர்கள் வீரத்திலும் தீரத்திலும் சிறந்தவர்களாக இருந்தாலும் அதில் அறத்தை கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர். சங்க காலத் தமிழர்கள் வீரமும் நெஞ்சில் ஈரமும் கொண்டே வாழ்ந்திருக்கிறார்கள் பகைவர் முன் ஞாயிறு போலவும், நண்பர்கள் முன் திங்களைப் போலவும் வள்ளலாக மக்களும் மன்னரும் இருந்துள்ளனர்.

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் போடுத்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும்

எம் அம்பு கடிவிடுதும் நம் அரண் சேர்மின் என''9 (புறம்:9:10-5)

வன்மையுடையவரை எதிர்த்து போரிடுவதே ஆற்றல் உடையவரின் இயல்பு. எனவே இம்மன்னன் தான் முற்றுகையிடும் தகர்களில் உள்ள வன்மை சுற்றாரைப் பாதுகாவலான இடஞ்சேருமாறு முதற்கண் எச்சரிப்பான் என்று புலவர் கூறும் புறப்பாட்டைக் காணமுடிகிறது. ''மடிந்த உள்ளத்தோனையும், மகப்பேறு இல்லாதோரையும், மயிலுகுலைந்தோனையும் புறமுதுகு காட்டுவோனையும் பெற பெயரோனையும் படைக்கலன் இழந்தோனையும் போரில் சொல்லாது'' 10 விடுதல் வேண்டும் என்றும், யாதொரு தீங்கும் நேராதவாறு போர் செய்தால் வேண்டும் என்றும் கொள்கையைப் பின்பற்றிஅரசியல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. அரசர்கள் அறநெறியோடு போர்க்களத்தையும் கையாண்டுள்ளனர்.

**<u>வெற்றி அமைதியான வாழ்வைத் தருமா ?</u>**

புலவர்கள் அரசர்களுக்கு ஆற்றுப்படுத்துவார்கள், என்பதை புற இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. இனத்தால் மொழியால் ஒன்றானத் தமிழர்கள் நாட்டால் பிளவுபட்டு இன்று பலஉயிர் போய்க்கொண்டிருக்கின்றதே என்று புலவர்கள் மனம் வருந்தி அரசனிடம் அறிவுரை கூறிய செய்திகளைக் காணமுடிகிறது. ''போர் வெற்றி செழியள் நல்லாட்சிக்கு இடையூராய் அமைந்தது. குடிமக்களை ஓம்பி அவர்தம் வாழ்வுக்குரிய வசதிகளைச் செய்து தர தடைக்கல்லாய் மாறியது. அடிக்கடி நடக்கும் போரும் வெற்றியும் புகழைத் தரலாம். அமைதியான வாழ்வை மக்களுக்குத் தருமா ? அறவழி ஆட்சிக்கு துணை புரியுமா ? சிந்தித்தார் பாண்டியனிடம் சென்றார். நிலவனத்தைக் கூட்டி நீர் வளத்தைப் பெருகச்செய்க அறச்சாலைகள் அமைத்து, பசிப்பிணி போக்குக. போர்க் குணத்தை ஒழித்து மக்களின் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான நற்பணிகளைச் செய்க என்ற கருத்தமைந்த பாடலைப் பாடினார் குட புலவியனார்'' 11

''இடிப்பாரை இல்லாத ஏமரா மண்ணன்

கெடுப்பார் இலானும் கெடும்'' 12 (குறள் : 448)

மன்னன் அறம் நாடாமல் மறம் நாடிச் சென்றதால் அவனைத் தடுத்து நல்வழிப்படுத்தும் நல்ல முயற்சியை செய்து வந்துள்ளனர் புலவர்கள். உற்ற தோழனாகவும் உயர்ந்த சிந்தனையாளர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

**தொகுப்புரை :**

மன்னர் ஆட்சி காலத்தில் அரசர்கள் தம் படையால் மட்டுமே வெற்றி என்ற நினைத்ததை மாற்றி அறத்தாலும் மக்களை தன்வசப்படுத்த முடியும் என்று புலவர்கள் அரசர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசர்கள் தங்கள் எல்லையை விரித்து ஆட்சியாள்வதையே எண்ணமாக வைத்திருந்தாலும் அதிலும் அறத்தை கடைப்பிடித்துள்ளனர். போரில் தன்னை ஒத்த வீரருடன் போரிடும் பண்பைக் கொண்டிருந்தனர். தகுதியற்ற வீரனிடம் போரிடுவது மடமை என்பதை நன்கு அறிந்திருந்தனர். வெற்றிக்காக வீழ்ந்தவர்கள் குழந்தைகளை போரில் ஈடுபடுத்திய செய்தியையும் காணமுடிகிறது. மக்கள் அறத்தைக் கடைப்படிக்க வேண்டுமானால் மன்னர்கள் அறத்தைக் கடைப்பிடித்து வாழவேண்டும் என்பதை புலவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். போரில் ஈடுபடும் முன்பு பசு, பார்ப்பாளர், பத்தினி பெண்டிர் குழந்தைகள் முதியவர்கள் ஆகியோரை பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தி பின் படைஎடுத்த செய்தியைக் காணமுடிகிறது. அடிக்கடி போர் நிகழ்வது வெற்றி தந்தாலும், மக்களின் மகிழ்வான வாழ்வுக்கு வழிவகுக்குமா. மக்களிடம் மகிழ்ச்சி இருக்காது. ஆதலால் மறத்தோடு அறத்தைப் போரில் ஆட்சியாள வேண்டும் என்பதை மக்கள் மன்னர் புலவர்கள் உணர்ந்துள்ளதை காணமுடிகிறது.

**அடிக்குறிப்புகள் :**

1. புலியூர் கேசிகன், புறநானூறு பா.35:240-26
2. மேலது, பா.35:31-34
3. மேலது, பா.142:4-6
4. பெ.மாதையன், சங்க கால இனக்குழு சமுதாயமும் உருவாக்கமும். ப.140
5. மேலது ப.147
6. புறநானூறு, ப.147
7. மேலது, பா.2:13-16
8. புலவர் க.பாண்டியன், புறநானூற்றில் வாழ்வியல் கோட்பாடுகள். ப.187
9. புறநானூறு, பா.9:1-5
10. தொல்காப்பியம், புறத்திணையியல். நூ.10

11. அரங்க பரமேஸ்வரி, அறம் வளர்த்த அருந்தமிழ்ப் புலவர்களும் புரவலர்களும், ப.103
12. திருக்குறள், 448

# துணை நூற்பட்டியல்


1. புலியூர் கேசிகன் புறநானூறு
   பாரிநிலையம், 184, பிராட்வே சென்னை.
2. சா.வே சுப்ரமணியம் தொல்காப்பியம்
   மணிவாசகர் பதிப்பகம், சிங்காரத்தோப்பு, பாரிமுனை, சென்னை.
   முதல் பதிப்பு — 1998
3. அப்பாத்துரை ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்
   பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை.
   முதல்பதிப்பு — 2003
4. அறவாணன் க.ப. தமிழ்ச் சமுதாய வரலாறு
   தமிழ்க்கோட்டம், 11, இரண்டாம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி-5.
5. அரங்க.பரமேஸ்வரி அறம் வளர்த்த அருந்தமிழ் புலவர்களும், புரவலர்களும்
   மங்கை பதிப்பகம், 700, எம்.ஜி.ஜி முதன்மை சாலை, வேளச்சேரி, சென்னை.
   முதல் பதிப்பு — 1.
6. அப்பாத்துரை கா. புலவர் தென்னாட்டு போர்க்களங்கள்
   ரிதம் வெளியீடு 58, ஆலந்தூர், சைதாப்பேட்டை, சென்னை.
   முதல் பதிப்பு — 2022


# Bibliography


1. Puliyur Kesikan Purananooru
   Paari Nilayam, 184, Broadway, Chennai.
   First Edition – 1995
2. Sa.Ve. Subramaniam Tholkappiyam
   Manivasagar Pathipagam
   Singara Street, Parry's Corner, Chennai-108
   First Edition – 1998
3. Appadurai Ayirathonnooru Andukatku Murpatta Tamilagam

Poompuhar Pathipagam, 127, Prakasam Street, Chennai-108.
First Edition – 2003.

4. Aravanan Ka.Pa. Tamil Samudhaya Varalaru
Tamil Koattam, 11, Second Street, Mohan Nagar, Puduchery-05
5. Aranga. Parameswari - Aram Valartha Arunthamizh Pulavargalum, Puravalargalum
Mangai Pathipagam, 700, M.I.G. Main Road, Velachery, Chennai-42
First Edition – 2017
6. Appadurai Pulavar Thennattu Porkalangal
Rythm Veliyeedu, 58, Alandur , Saidapet, Chennai-15.
First Edition – 2022.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com